செ.வெ. எண்: 174 நாள்:03.03.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.3.2012) தலைமைச் செயலகத்தில், சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற காவலர் திறனாய்வு போட்டிகளில் (Police Duty Meet)பதக்கங்களை வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கினார்கள்.

தமிழக காவல்துறையைச் சேர்ந்தவர்கள் பல சர்வதேச மற்றும் தேசிய அளவிலான திறனாய்வு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று வருகிறார்கள். அண்மையில் நியூயார்க் நகரில் நடைபெற்ற World Police and Fire Games போட்டியில் 10,000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கமும், 3000 மீட்டர் Steeple Chase போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 1500 மீட்டர் நடைப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும், 5000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கமும் வென்ற சென்னை காவல்துறையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு.எஸ். ரகுநாத் அவர்களுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினையும்; மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூரில் நடைபெற்ற 5–வது All India Police Shooting (Sports) Championship போட்டியில் .177 Air Pistol 10 மீட்டர் போட்டியில் வெண்கலப் பதக்கமும், 22 Free Pistol 50 மீட்டர் போட்டியில் வெண்கலப் பதக்கமும், மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற 53–வது All India Police Duty Meet–2009 துப்பாக்கிச் சுடும் போட்டியில் Pistol-50 yards lying position போட்டியில் வெள்ளிப் பதக்கமும், Pistol-25 yards quick reflex position போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்ற தமிழ்நாடு சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர் திரு. செந்தில் ராஜ் அவர்களுக்கு 90 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினையும்; கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 60–வது All India Police Aquatic and Cross Country Meet-2011 போட்டியில் 50 மீட்டர் Free Style நீச்சல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு கமாண்டோ படையைச் சேர்ந்த காவலர் திரு. ஏ. ஆனந்தராஜ் அவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினையும்; மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற 53–வது All India Police Duty Meet–2009 துப்பாக்கிச் சுடும் போட்டியில் Sub-Machine gun -50 yards aimed போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற புதுக்கோட்டை தலைமை காவலர் திரு. ஏ. முருகானந்தம் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசினையும் இன்று (3.3.2012) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி, மேலும் பல சாதனைகளை புரிய வேண்டுமென்று அவர்களை வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்வின்போது, உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை தலைமை இயக்குநர் (பயிற்சி), சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 3.3.2012